# LAABH SAMACHAR

லாப் ஸமாச்சார் | வணிக மாத இதழ்

Volume: 12 | Issue : 05 | **AUGUST 2023** | Tamil & English Monthly | Price: Rs. 10/-

official Publication SOURASHTRA CHAMBER OF COMMERCE




மதுரையில்
மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர்
**திரு. மு.க. ஸ்டாலின்** அவர்கள்
**பத்மஸ்ரீ டி.எம். சௌந்தரராஜன்** அவர்களின்
முழு திருவுருவ வெண்கல சிலையை திறந்து வைத்து
அவரது புகைப்படத்திற்கு மரியாதை செலுத்துகிறார்.

To



பத்மஸ்ரீ
**டி.எம். சௌந்தரராஜன்** அவர்களின்
முழு திருவுருவ சிலை






அனைத்து வகையான காலணிகள்
மொத்த விற்பனையாளர்கள்

METRO

# மெட்ரோ ஷூ மார்ட்

16, அமெரிக்கன் மிஷன் சர்ச் தெரு,
(பெரியார் பஸ் ஸ்டாண்ட் அருகில்)
மதுரை - 625 001.

**PH : 23322364, 2331297, 4382343**



TEXMO®

Borewell Submersibles
Single Phase Domestic Pumps
Single Phase Jet Pumps

AQUA GROUP

Authorised Dealer :

## Sri Balameenakshi Aqua Pumps

AQUATEX®

Agricultural Monoblocks
Open-well Submersibles
Pressure Boosting Systems

124, West Masi Street, Near Murugan Temple, Madurai - 625 001. Cell : 93616 25696

**H.O. : Madurai Pipes**

76, South Avani Moola Street, Madurai - 625 001. Phone : 0452 - 4378524, Cell : 94437 95317
B.O. : 32A, Athikulam Main Road, New Natham Road, Madurai - 625 014. Cell : 99946 57349






Prop.: B.S. Rajan

- CCTV Camera
- Long Distance Monitor
- Security Alarm
- Digital Video Recorder
- Voice Records
- Access Control System
- Firm Alarm
- Audio & Video Door Phones

*Safety! Security!! Surveillance!!!*

## A TO Z
**CCTV SYSTEMS**
CCTV Camera Exclusive Showroom

*Head Office :*
No. 45, Kakkathoppu Street,
Town Hall Road, Madurai - 1.
Ph : 0452 - 4377609, 4522633 Cell : 98421 82633

*Branch Office :*
66, Kamarajar Street,
Opp. Keelavasal Bus Stop, Madurai - 9.
Cell : 73737 82633

**உங்கள் உடல்
எடையை பராமரிக்க
குறைக்க / அதிகரிக்க
விரும்புகிறீர்களா?**

- உங்கள் விருப்பமான உணவை தவிர்க்காமல்.
- கடின உடற்பயிற்சி இல்லாமல்.
- பாதுகாப்பு மற்றும் அதிக பயன்.
- உங்கள் குடும்பத்தில் உள்ள அனைவரும் சரியான எடையில் ஆரோக்கியமாக இருக்க

**ஆலோசனை பெற அணுகவும்**

**L.N.R. தாமோதரன் - 98431 71477**



# தலைவர் அறிக்கை

*அஸ்கிதெ ஃகோ மொன்னு பொறெ*

## நமஸ்கார்...

**T.R.மோகன்ராம்**
**தலைவர்**

நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் 2007ம் ஆண்டு துவங்கியது முதல், வர்த்தக கண்காட்சியை நடத்தி வருகிறது. 2008ம் ஆண்டு தாய்க்கழகமான ஸௌராஷ்ட்ர சமூக நலப் பேரவை நடத்திய திவளி தின்னாள் நிகழ்ச்சியில் 30 ஸ்டால்களுடன் முதன்முதலில் வர்த்தக கண்காட்சியை நமது சேம்பர் பொறுப்பேற்று நடத்தி வந்தது. பின்னர், 2011ம் ஆண்டு சேம்பர் நடத்திய சிட்கான் தொழில் வர்த்தக கருத்தரங்கு மாநாட்டுடன் வர்த்தக கண்காட்சி ஸ்டால்கள் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தி வந்தது. அதில் ஏறக்குறைய 75 முதல் 100 ஸ்டால்கள் வரை இடம் பெற்றன. இந்த 15 வருட காலத்தில், கலாச்சார நிகழ்ச்சிகள், வர்த்தக கருத்தரங்குகளுடன் மட்டுமே இணைத்து நடத்தப்பட்டு வந்த சேம்பர்-ன் வர்த்தக கண்காட்சி முதல்முறையாக கண்காட்சியை மட்டுமே நடத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது. இதற்கு முக்கிய காரணம் சேம்பர் அங்கத்தினர்கள், பொதுமக்களின் அபிமானம் மற்றும் வர்த்தக ஸ்டால் அமைப்பாளர்களின் ஆர்வமே ஆகும். இதனை பொறுப்பேற்று நடத்திய சேம்பர் துணைத் தலைவர் திரு. கே.கே. தினேஷ் அவர்களுக்கு நமது சேம்பர் பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறது.

நம் சமூகத்தின் பெயரை நிலைநாட்டும் வகையில், மதுரையில் ஒரு அடையாளம் உருவாகியுள்ளது. அந்த அடையாளத்தை இந்த உலகமே பார்த்து வியக்கும் வகையில் நேரில் வந்து திறந்து வைத்துள்ளார் மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் **திரு. மு.க. ஸ்டாலின்** அவர்கள். தமிழ் மொழி உச்சரிப்பாலும், நடிகர்களின் தோற்றத்திற்கேற்ப குரல் நடையுடன், தன் வெண்கலக் குரலாலும் அனைவரையும் ஈர்த்த பத்மஸ்ரீ டாக்டர். டி.எம். ஸௌந்தரராஜன் அவர்களின் சிலை திறப்பே அந்த மிகப்பெரிய அடையாளமாகும். சிலை திறப்பதற்கு சிரத்தையுடன் முயற்சி செய்த மதுரை தெற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. மு. பூமிநாதன் அவர்களுக்கு நமது ஸௌராஷ்டர சேம்பர் ஆப் காமர்ஸ், ஸௌராஷ்ட்ர சமூக மக்களின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

## SOURASHTRA CHAMBER OF COMMERCE
## BOARD OF MEMBERS YEAR 2022-2024

| Office Bearers | Designation | Contact |
|---|---|---|
| T.R. Mohanram | President | 93441 01432 |
| Kumaran B. Jaghuva | Imm. Past President | 99949 26348 |
| K.K. Dinesh | Vice President | 98421 16461 |
| K.K. Kubendran | General Secretary | 93441 25647 |
| A.B. Kumaresh Babu | Treasurer | 93443 04980 |
| V.V. Ramlakshmanji | Joint Secretary | 94439 30728 |
| T.R. Saravanan | Joint Secretary | 92446 84702 |

| EC Members | Team-Chairmen | Contact |
|---|---|---|
| V.G. Ramdoss | International Affairs | 93441 00360 |
| J.S. Sayee Jeevan | Administration | 90809 51577 |
| S.G. Srinivasan | Greetings | 91500 99456 |
| T.N. Suriyaprakash | Public Relation | 93441 52068 |
| A.R. Ganesan | Cultural & Food | 98421 75804 |
| B.S. Janaarthanan | Members Liason | 97905 75650 |
| G.R. Subramanian | Membership Retain | 94427 52044 |
| T.K. Sivanath Babu | Growth & Development | 94423 27081 |
| S.M. Karthi Kumaran | Bulletin | 94438 31496 |
| S.K.B. Chandraprakash | Political Affair | 98655 45048 |
| N.S. Prem Kumar | Govt. Relation | 99945 35350 |
| K.K. Dinakaran | Building & Fund Raising | 98409 60833 |
| K.V. Kumaresan | Entertainment | 98940 51735 |
| S.S. Ramsundar | Publicity | 93441 22181 |
| E.R.K. Vignesh Babu | Social Media | 94422 44648 |
| T.M. Rubesh Babu | Program | 95000 35200 |
| S.S. Premkumar | IT | 96293 42295 |
| S.R. Sundarnath | Community Relation | 92444 03917 |

| Past Presidents cum EC Members | | Contact |
|---|---|---|
| K.V. Bala, Senior President | - Yr. 2007-2009 | 044 2833 0867 |
| C.K. Sekar | Yr. 2009-2011 | 97900 77111 |
| E.R. Kumaresan | Yr. 2011-2013 | 93674 66777 |
| K.K.G. Prabhakaran | Yr. 2013-2015 | 98409 60845 |
| S.K.R. Ramesh | Yr. 2015-2017 | 96552 34409 |
| M.K. Kaladhar Babu | Yr. 2017-2019 | 99944 84443 |
| **Advisors** | | |
| K.K. Surendranath | | 98409 88810 |
| K.K. Karunakaran | | 98409 60844 |
| T.K.D. Mohan | | 98430 52530 |

| Patron Members | |
|---|---|
| K.K. Surendranath | M/s. Varuni Chemicals |
| K.S. Ravindranath | M/s. Indowind Energy Ltd., Chennai |
| M.K. Jawahar Babu | M/s. Jawahar Babu |
| K.R.M. Niranjan Kumar | M/s. India Ultra Sound, Calicut |
| E.R. Kumaresan | M/s. V.P.C. Textiles |
| M.R. Krishnamoorthy | M/s. PT. Kewalram, Indonesia |
| T.S. Sivaprakash | M/s. Shree Sivabalaji Steels (P) Ltd., |
| T.L. Dukaram | M/s. Anezlina Cosmos |
| T.L. Sabari Babu | M/s. Sowbhaagyaas Gold & Diamond |
| B.V. Ramesh | M/s. Karpagam Motors |
| T.E. Yogesh | M/s. The Constructive Company |
| L.G. Padmanabhan Iyer | M/s. Karishma Electro Platers, Mumbai |

| Editorial Board | Designation | Contact |
|---|---|---|
| K.K. Gnana Prabhakaran | Publisher | 98409 60845 |
| S.M. Karthi Kumaran | Chairman | 94438 31496 |
| K.B. Sivaprakash Babu | Member | 94433 66251 |
| T.K. Yageshwaran | Member | 99524 22260 |



## பொதுச்செயலாளர் அறிக்கை

*அங்கத்தினர்களுக்கு வணக்கம்*

- K.K. குபேந்திரன்

**18.07.2023** – ஸௌராஷ்ட்ர சேம்பர்–ன் 9வது செயற்குழு கூட்டம் ஸௌ. சேம்பரில் நடைபெற்றது. இதில் சேம்பர் குழுவினர் பலர் கலந்து கொண்டனர்.

**01.08.2023** – மகளிர்க்கான உன்னை வெல் நிகழ்ச்சியில், சிறப்பு விருந்தினராக NMR மகளிர் கல்லூரி வணிகவியல் துறை தலைவர் பேராசிரியர் திருமதி. கபிதா ராம் அவர்கள் கலந்து கொண்டார்.

**04.08.2023** – வர்த்தக கண்காட்சியின் துவக்க விழா நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ்.எஸ். சரவணன் அவர்கள் கௌரவ விருந்தினராக மதுரை மாவட்ட தொழில் மைய இணை இயக்குனர் / பொது மேலாளர் திரு. சி. கணேசன் அவர்கள் கலந்து கொண்டு கண்காட்சியை துவக்கி வைத்தனர். கண்காட்சி தொடர்ந்து மூன்று நாட்கள் நடைபெற்றது.

**06.08.2023** – கண்காட்சியின் நிறைவு நாளில், மதுரை மாவட்ட தொழில் மைய உதவி இயக்குநர் (தொழில்நுட்பம்) திரு. என்.எஸ். கிருஷ்ணன் அவர்கள் கண்காட்சியை பார்வையிட்டார். மேலும், மதுரை தெற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. மு. பூமிநாதன், தெற்கு மண்டல தலைவர் திரு. முகேஷ் சர்மா மற்றும் தமிழக பா.ஜ.க. மதுரை கிழக்கு மாவட்ட பார்வையாளர் திருமதி. ஏ.ஆர். மஹாலட்சுமி ஆகியோர் கலந்து கொண்டு பார்வையிட்டு வாழ்த்திப் பேசினர்.

**15.08.2023** – நம் நாட்டின் 77வது சுதந்திர தின விழா கொண்டாடப்பட்டது. தேசியக்கொடியை சேம்பர் தலைவர் திரு. டி.ஆர். மோகன்ராம் அவர்கள் ஏற்றி கொடி வணக்கம் செலுத்தினார். சிறப்பு விருந்தினராக, மதுரை காந்தி நினைவு அருங்காட்சியக, காந்தியக் கல்வி ஆராய்ச்சிக் கழக முதல்வர் முனைவர் ஆர். தேவதாஸ் அவர்கள் கலந்து கொண்டார்.

**16.08.2023** – பத்மஸ்ரீ டாக்டர் டி.எம். ஸௌந்தரராஜன் அவர்களின் சிலையை மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் நேரில் வந்து திறந்து வைத்தார். இந்த முக்கியமான நிகழ்விற்கு நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் முக்கிய பங்கு வகித்தது.



## இதழ்குழுத் தலைவர் அறிக்கை

*அங்கத்தினர்களுக்கு வணக்கம்*

- S.M. கார்த்தி குமரன்

இந்த ஆகஸ்ட் மாதத்தில பல்வேறு முக்கிய நிகழ்வுகள் நடைபெற்றுள்ளன. அதன்காரணமாக 20ம் தேதி வெளியாக வேண்டிய நமது இதழ் 30ம் தேதி வெளியாகியுள்ளது.

இந்த மாத இதழில் பல்வேறு முக்கிய நிகழ்வுகளை அனைவரின் கண்கள் குளிரும் புகைப்புடங்களுடன் இடம்பெற்றுள்ளன. நிச்சயம் மகிழ்ச்சியடைவீர்கள் என்று நம்புகிறேன்.

மேலும், வர்த்தக கண்காட்சியில் நமது இதழ் குழுவின் சார்பாக குலுக்கல் முறையிலான பரிசுப்பொருட்கள் மூன்று நாட்களுக்கும் பொது மக்களுக்கு வழங்கப்பட்டது. இந்த பரிசுப்பொருட்களை வழங்கிய நிறுவனத்தார் அனைவருக்கும் நமது லாப் ஸமாச்சார் குழு நன்றி தெரிவித்துக்கொள்கிறது.

பத்மஸ்ரீ டி.எம். ஸௌந்தரராஜன் அவர்களின் முழு திருவுருவச் சிலை திறப்பு விழா குறித்த விபரங்கள் இந்த மாத இதழில் இடம்பெற்றுள்ளன. இந்த வரலாற்று சிறப்புமிக்க நிகழ்வு குறித்த விபரத்தை லாப் ஸமாச்சார் இதழில் வெளியிட எனது தலைமைப் பொறுப்பு காலத்தில் இந்த வாய்ப்பு கிடைத்ததற்கு மிகுந்த பெருமைகொள்கிறேன்.





Exclusive Showroom for U'r Branded Products

IDEAL innerwear · ANAND · Viking · Prithvi INNER WEARS · NAIDU HALL THE FAMILY STORE · JOCKEY INNER WEAR · Poomex · MANGAI NIGHTIES · RASATHE DARLING NIGHTIES · YOKE'S NIGHTY

& All Branded Innerwears for All

Online Purchase for any Items Call 98941 41402 payments by G Pay PhonePe
Save Your Valuable Time, Money & Healthy Life.

B THE BABY SHOP
அலங்கார் தி பேபி ஷாப்

உள்ளாடைகள் உலகம்

280, காமராஜர் சாலை, விளக்குத்தூண்,
மதுரை - 625 009. அலைபேசி : 98941 41402

HP பெட்ரோல் பங்க் எதிர்புறம், SR காம்ப்ளக்ஸ் பில்டிங்,
மீனாட்சி நகர், வில்லாபுரம்,
மதுரை – 625 012. செல் : 98941 41402

*Best Compliments from*

# BVK GROUP

Indus Finance Ltd
Indowind Energy Ltd
EverOn Power Ltd
BeKae Properties P Ltd
BVK Foundation

4th Floor (NW), Kothari Building, 114, M.G. Road, Nungambakkam, Chennai - 600 034.
No.603, Keshava - BKC, Mumbai - 400 051.





AUGUST
monthly
MEET

# உன்னை வெல்





ஆகஸ்ட் 1ம் தேதி அன்று உன்னை வெல் என்கிற தலைப்பில் மகளிர்க்கான சிறப்புக் கூட்டம் நடத்தப்பட்டது. இதில் சிறப்பி விருந்தினராக Jc Dr. R.J. **கபிதா** Head. Dept. of Commerce with Computer Application, Madurai Gandhi NMR Subbaraman College for women, Mdu. அவர்கள் கலந்துகொண்டு பேசினார். சேம்பர் அங்கத்தினர்களின் இல்லத்தரசிகள் பலர் ஆர்வத்துடன் இந்தக் கூட்டத்திற்கு கலந்துகொண்டு சிறப்பித்தனர். சேம்பர் தலைவர் திரு. T.R. மோகன்ராம் அவர்கள் நிகழ்ச்சிக்கு தலைமைத் தாங்கினார். பொதுச் செயலாளர் திரு. K.K. குபேந்திரன் அவர்கள் கூட்டத்தை ஏற்பாடு செய்தார். திருமதி. கபிதா அவர்கள், நாம் எடுக்கும் முயற்சியில் வெற்றி பெருவதற்கு நாம் எவ்வாறு நம்மை தயார்படுத்திக்கொள்வது என்பது பற்றி மிக அருமையான விளக்கங்களுடன் பேசினார். தொழில்முனைவோர்கள், மகளிர்க்கு இந்த பயனுள்ளதாக அமைந்தது. சேம்பர் சார்பாக சிறப்பு விருந்தினரை திருமதி. பிரதீபா குமரேசன் அவர்கள் நினைவுப்பரிசு வழங்கியும் பொன்னாடையும் அணிவித்தும் கௌரவித்தார்.










ஸ்ரீ முருகன் துணை

K.S. மோகன்லால்



98430 72626
98425 72626

ஹரிலால்

பில்டிங் மெட்டீரியல்ஸ் சப்ளையர்ஸ்

குறிப்பிட்ட நேரத்தில்
டெலிவரி செய்யப்படும்



* செங்கல்
* மணல்
* ஜல்லி (1 1/2", 3/4", 1/2")
* கிராவல்
* கிரஷர் தூசி
* சங்கர் டால்மியா சிமெண்ட் மூடை
* உடைகல்

No: 125, ஞானவேல் காலனி, கீரைத்தோட்டம் ரோடு, (மல்லிகை தெரு), தெப்பக்குளம், மதுரை – 9











பாரதத் திருநாட்டின் 77வது சுதந்திர தின விழாவை நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் சிறப்பாக கொண்டாடியது. காலை சரியாக 8.30 மணிக்கு சேம்பர் தலைவர் திரு. T.R. மோகன்ராம் அவர்கள் தேசியக்கொடியை ஏற்றினார். விழாவின் சிறப்பு விருந்தினராக மதுரை, காந்தி நினைவு அருங்காட்சியக, காந்தியக் கல்வி ஆராய்ச்சி கழக, முதல்வர் Dr. R. தேவதாஸ் அவர்கள் கலந்த கொண்டு காந்தியக் கோட்பாடுகள் படி நாம் எவ்வாறு நம் வாழ்வியல் முறைகளை மாற்றிக்கொள்ள வேண்டும் என்று பேசினார். மேலும், மகாத்மா காந்தியடிகள் பற்றி பல்வேறு அறிய தகவல்களை தெரிவித்தது ஆச்சரியமளிக்கும் விஷயமாக இருந்தது.









ASTROLOGER, PALMIST, ACU PUNCTUREIST

OM SHANTI

Cell: 90805 54802, 99424 90217

**Prof. Dr. M.V. SUBBURAMAN**

M.A.(Hin)., M.A.(Phil)., M.A.(Astro)., M.A. (Yoga), M.Ed., M.Phil., M.D.(Acu.)., M.B.A., PGDELT, Ph.D.(Hin)



Academic Co-ordinator for Hindi, D.D.E., M.K. University (Retd. HOD of Hindi, The American College, Madurai).

MARRIAGE & RE-MARRIAGE MATCHING CENTRE

ACU Puncture Treatment : 11.00 A.M - 2.00 P.M
Astrology Consultancy 5.00 P.M - 9.00 P.M

4, Keelamathur Pallivasal Main Street, Near Alankar Theatre, Madurai - 625009.
email: subburamanastro@gmail.com

### பிரபல தமிழ் பின்னணிப் பாடகர்

# ஐயா டி.எம். சௌந்தரராஜன் அவர்களுக்கு முழு திருவுருவ சிலை திறப்பு

## மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்





சௌராஷ்ட்ர சமூகத்தின் நீண்ட நாள் கோரிக்கைகளில் முக்கியமான ஒன்றை தமிழக அரசு நிறைவேற்றியுள்ளது. சௌராஷ்ட்ர சமுதாய மக்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

தன் வெண்கலக்குரலாள் உலக மக்கள் அனைவரையும் தன் வசம் ஈர்த்தவர். சினிமா துறையில் முன்னணி நடிகர்களுக்கு நிகராக ஜொலித்தவர் **பத்மஸ்ரீ டாக்டர் டி.எம். சௌந்தரராஜன்**.

16.08.2023 அன்று மதுரை முனிச்சாலை பகுதியில் அவரின் முழு திருவுருவ வெண்கலச் சிலையை **மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின்** அவர்கள் திறந்து வைத்தார். இந்த நிகழ்வு சௌராஷ்ட்ர சமுதாய மக்களுக்கு ஏற்றத்தையும், பெருமையையும் அடையச் செய்துள்ளது.

இதற்கு முக்கிய காரணமாக இருந்த மதுரை தெற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் **திரு. மு. பூமிநாதன்** அவர்களை சௌராஷ்ட்ர சமுதாய மக்களின் சார்பாக சௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறது. அவரோடு, தமிழ்நாடு அமைச்சர் பெருமக்களையும், மதுரை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திரு. சு.வெங்கடேசன் அவர்களையும், தெற்கு மண்டலத் தலைவர் திரு. முகேஷ் சர்மா அவர்களையும் நமது சௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் நன்றி தெரிவித்துக்கொள்கிறது.

சிலை வைப்பதற்கு முதன் முதலில் சட்டமன்றத்தில் குரல் கொடுத்த முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ்.எஸ். சரவணன் அவர்களையும் நமது சௌராஷ்ட்ர சமூக மக்கள் நினைவில் கொண்டுள்ளனர்.

டி.எம். சௌந்தரராஜன் அவர்களின் சிலை அருகே உள்ள புதுராமநாதபுரம் சாலை பெயரை டி.எம். சௌந்தரராஜன் சாலை என்று பெயர் மாற்றம் செய்ய மதுரை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் **திரு. மு. பூமிநாதன்** அவர்கள் மதுரை மாவட்ட ஆட்சியர் அவர்களை கேட்டுக்கொண்டுள்ளார். நமது சேம்பரும் முதல்வர் அவர்களிடம் இது குறித்த கோரிக்கை மனுவும் அளித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

சௌராஷ்ட்ர சமுதாய மக்களுக்கு இது ஒரு வரலாற்று நிகழ்வாகும். ஆகையால், அன்றைய தினம், தினமலர், தினத்தந்தி, தினமணி, தினகரன், தி இந்து தமிழ், மாலை மலர் மற்றும் மாலை முரசு ஆகிய 7 நாளிதழ்களில் சேம்பர் அங்கத்தினர்கள் மற்றும் முக்கியப்பிரமுகர்களின் பங்களிப்புடன் திறப்பு விழாவின் விளம்பரம் செய்யப்பட்டது.

இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க சிலை திறப்பு நிகழ்வில் நமது சௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் முக்கிய பங்காற்றியதன் மூலம் சேம்பருக்கு ஏற்றத்தை அளித்துள்ளது.








சேம்பர் முதுநிலைத் தலைவர் திரு. கே.வி. பாலா மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களை வரவேற்கிறார்.



சேம்பர் முன்னாள் தலைவர் திரு. K.K.G. பிரபாகரன் சேம்பர் தலைவர் திரு. T.R. மோகன்ராம் இணைந்து மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களை நினைவுப் பரிசு வழங்குகிறார்கள்.

## தமிழ்நாடு முதல்வர் அவர்களின் டிவிட்டர் பதிவு



Tweet

M.K.Stalin
@mkstalin

தமிழ் சினிமாவை தனது காந்த குரலால் கட்டிப் போட்டு - நாற்பது ஆண்டுகள் கோலோச்சிய டி.எம்.சௌந்தரராஜன் அவர்களது சிலையை மதுரையில் திறந்து வைத்தேன்.

24 வயதில் பாடத் துவங்கி, 11 மொழிகளில் 10 ஆயிரத்துக்கும் மேல் திரைப்பாடல்கள், 2500 பக்திப் பாடல்களைப் பாடிய அவர், பட்டினத்தார், அருணகிரிநாதர் போன்ற படங்களிலும் நடித்திருக்கிறார். டி.எம்.எஸ் அவர்கள் பாடிய பக்திப் பாடல்கள் இன்றுவரை தமிழ்நாட்டின் அனைத்துக் கோயில்களிலும் திருவிழாக்களிலும் ஒலித்துக்கொண்டிருக்கிறது.

அவரது நூற்றாண்டு விழாவையொட்டி, சென்னையில் அவர் வாழ்ந்த வீடு அமைந்திருக்கும் மந்தைவெளி வெளிவட்டச் சாலைப் பகுதிக்கு ‘டி.எம்.சௌந்தரராஜன் சாலை’ எனப் பெயர் சூட்டினோம்.

“திரை இசை, மக்கள் இசை யாரும் அடையாத உயரத்தைப் பெற்றவர் டி.எம்.எஸ். 1950-ஆம் ஆண்டு மந்திரிகுமாரி காலத்தில் இருந்து எனக்கு நண்பர். நடிகர்களுக்கு ஏற்ப குரலை மாற்றிப் பாடும் வித்தைக்காரர்” என முத்தமிழறிஞர் கலைஞரால் பாராட்டப்பட்டவர்.

கலைஞரின் வரிகளில், ஏ.ஆர். ரகுமான் இசையில் உருவான ‘செம்மொழியான தமிழ்மொழியாம்’ என்ற பாடலில், மற்ற இளம் பாடகர்களுடன் இணைந்து டி.எம்.எஸ் பாடியிருந்தார்.

காலத்தால் அழியாத பாடல்கள் பல பாடிய அவர் என்றென்றும் தமிழ் மக்களால் நினைவுகூரப்படுவார்.

#TMS100 #TMSoundararajan

Translate Tweet

9:50 pm · 16 Aug 23 · 104K Views

894 Retweets 16 Quotes 2,423 Likes 1 Bookmark

Tweet your reply






# வெற்றிகரமாக நிலவில் இறங்கிய சந்திரயான் – 3

## இஸ்ரோ விஞ்ஞானிகளின் சாதனை நாட்டு மக்களுக்கு பெருமை



23.08.2023 அன்று நமது இஸ்ரோவின் முயற்சியில் அனுப்பப்பட்ட சந்திரயான் 3 வெற்றிகரமாக நிலவில் தரையிறங்கி சாதனைபடைத்து அனைத்து உலக நாடுகளையும் திரும்பிப் பார்க்க வைத்துள்ளது. அமெரிக்கா, ரஷ்யா மற்றும் சீனாவிற்குப் பிறகு இந்த சாதனையை நிகழ்த்திய உலகின் நான்காவது நாடாக இந்தியா திகழ்கிறது. முக்கியமாக நிலவின் தென் துருவத்தில் தரையிறங்கிய உலகின் ஒரே நாடு இந்தியா தான் என்ற பெருமையை பெற்றுள்ளது.

சந்திரயான் 3 சந்திரனில் 14 நாட்கள் செயல்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதன் முக்கிய நோக்கங்கள், 1. நிலவின் மேற்பரப்பில் பாதுகாப்பான மற்றும் மென்மையான தரையிறக்கத்தை நிரூபிப்பது, 2. நிலவில் ரோவர் சுற்றி வருவதைக் காட்டுதல் மற்றும் 3. உள் அறிவியல் சோதனைகளை நடத்துதல் ஆகும்.




இந்த விண்களத்திற்கு இஸ்ரோ சந்திரயான் என்று பெயர் வைப்பதற்கு காரணம், சமஸ்கிருதத்தில் **சந்திரயான்** என்ற பெயருக்கு நிலவுக்களம் என அர்த்தம். மறைந்த விஞ்ஞானி **விக்ரம் சாரா பாய்** நினைவாக இதன் லேண்டருக்கு **விக்ரம்** என பெயர் வைத்துள்ளனர். இதன் ரோவருக்கு பிரக்யான் என பெயர் வைத்துள்ளனர். இந்தப் **பிரக்யான்** என்ற பெயர் சமஸ்கிருத வார்த்தையில் இருந்து வந்தது. இதன் அர்த்தம் ஞானம் ஆகும்.

சந்திரயான்-3 திட்டம் இந்தியாவில் முதன் முறையாக கடந்த 2003ம் ஆண்டு சுதந்திர தின விழா-வின் அப்போதைய பிரதமர் வாஜ்பாய் அறிவித்தார். தற்போது 20 ஆண்டுகளுக்குப் பிறகு அந்த கனவு நினைவாகியுள்ளது. இஸ்ரோ விஞ்ஞானிகள் 20 ஆண்டுகளாக இந்த கனவிற்காக கடும் உழைப்பை செய்துள்ளனர்.

## சந்திரயான் – 3 ஏன் 14 நாட்கள் மட்டுமே ஆராய்ச்சி செய்கிறது?

நிலவில் லேண்டர் தரையிறங்கிய பகுதியில் இருந்து 500 மீட்டர் சுற்றளவில் 14 நாட்கள் வலம் வர இருக்கும் ரோவர், மெதுவாகப் பயணித்து நிலவின் மேற்பரப்பில் உள்ள மண், கற்கள், கனிமங்களின் தன்மை ஆராயப்படும். நிலவில் நீர்ப்பனி இருக்கிறதா என்பதும் ஆராயப்படும். நிலவின் தென் துருவத்தில் தண்ணீர் இருப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாக கூறப்படுகிறது. லேண்டர் & ரோவர் சூரிய ஒளித் தகடுகள் மூலம் கிடைக்கும் ஆற்றலில் இயங்கக் கூடியது. சூரிய ஒளி கிடைக்கும் வரைதான் அதன் மின்சாரத்தில் எல்லா கருவிகளும் இயங்கும். சூரியன் மறைந்ததும், நிலவின் தென் துருவம் இருண்டுவிடும். அப்பகுதியில் தட்பவெட்பம் மைனஸ் 180 டிகிரி அளவுக்கு சரிந்துவிடும். அந்த சமயத்தில் ஆய்வுக் கருவிகள் தாக்குப்பிடித்து இயங்குவது கடினம். 14 இருள் நாட்களுக்குப் பிறகு ஆய்வுக் கருவிகள் மீண்டும் உயிர்பெற்றுச் செயல்பட்டால் மகிழ்ச்சி அடைவோம். அதன்பிறகு மேலும் 14 நாட்களுக்கு அறிவியல் ஆராய்ச்சியில் ஈடுபட முடியும். ரோவர் சேகரிக்கும் தகவல்களை லேண்டருக்கு அனுப்பும். லேண்டர் பூமிக்கு அனுப்பி வைக்கும் என்று இஸ்ரோ தலைவர் எஸ். சோமநாத் கூறியுள்ளார்.





Available in :
15kg Tin, 1 Ltr, 1/2 Ltr, 200ml, 100ml, 50ml

சாரதி®
நல்லெண்ணெய்




Manufactured & Packed by : RAJALAKSHMI OIL MILL
2/502, Narasingam Road, Krishna Nagar, Kadachanenthal, Madurai - 625 107. Ph : +91 452 650 5795 Cell : 97894 52896 e-mail : reachus@sarathioil.in

ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-ன்

வீட்டு உபயோக பொருட்களின்

வர்த்தக **கண்காட்சி** மற்றும்

**விற்பனை**

# SCC Trade Fair 2023



தமிழக முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ்.எஸ். சரவணன் மற்றும் மாவட்ட தொழில் மைய இணை இயக்குனர் / பொது மேலாளர் திரு. சி. கணேசன் ஆகியோர் இணைந்து வர்த்தக கண்காட்சியை துவக்கி வைக்கிறாள்கள்.





**சி. கணேசன்**

இணை இயக்குநர் / பொது மேலாளர்
மாவட்ட தொழில் மையம், மதுரை.

கண்காட்சியில் இடம்பெற்ற ஸ்டால்கள் அமைப்பாளர்கள், இந்த கண்காட்சியை நடத்திச் செல்லும் ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்–க்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். குறு, சிறு தொழில் நிறவனங்களின் வளர்ச்சிக்குத் தேவையான அனைத்து விதமான உதவிகளையும், சலுகைகளையும் அரசு வழங்கி வருகிறது. தொழில்முனைவோர்கள் பயன்படுத்திக்கொண்டு முன்னேற கேட்டுக்கொண்டார்.

மதுரையில் உள்ள குறு தொழில் நிறுவனங்கள் தங்கள் தயாரிப்புகளை ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் வெளி உலகிற்கு தெரியப்படுத்தும் வகையில் செயல்பட்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக இந்த வர்த்தக கண்காட்சி நடைபெறுகிறது. இந்த கண்காட்சியின் மூலமாக மதுரையின் பல்வேறு பகுதிகளில் சிறிய அளவில் இயங்கி வரும் நிறுவனங்களின் விபரங்களை அறிந்துகொள்ள முடிகிறது. நிச்சயமாக பொதுமக்களுக்கு பயனுள்ளதாக இருக்கும்.



**எஸ். எஸ். சரவணன்**

தமிழக முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்











Organised by SOURASHTRA CHAMBER OF COMMERCE MADURAI    Co-presented by SOWBHAGYAAS

# ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-ன்
# வீட்டு உபயோக பொருட்களின் வர்த்தக கண்காட்சி மற்றும் விற்பனை



துவக்க விழாவில், SCC Trade Fair 2023 தொழில் வர்த்தக கண்காட்சி சேர்மன் திரு. கே.கே. தினேஷ் அவர்கள் கண்காட்சி குறித்தும், சேம்பர் பொதுச் செயலாளர் திரு. கே.கே. குபேந்திரன் அவர்கள் சேம்பர் செயல்பாடுகள் குறித்தும் பேசுகறார்கள்.



முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ்.எஸ். சரவணன் அவர்கள் கண்காட்சியில் இடம்பெற்றுள்ள ஸ்டால்களை பார்வைடுகிறார்.



மதுரை மாவட்ட தொழில் மைய இணை இயக்குநர் திரு. சி. கணேசன் அவர்கள் கண்காட்சியில் சன் பூஜாஸ் ஸ்டாலை திறந்து வைக்கிறார்.



கே.எல்.என். பொறியியல் கல்லூரி இன்நோவேஷன் & ரிஸர்ச் பார்க்-ன் மாணவர்கள் தங்களின் நுட்பான திறமையில் உருவாக்கிய தயாரிப்புகளை கண்காட்சியில் இடம்பெறச் செய்திருந்தனர். அதன் செயல்பாடுகள் பற்றி இணை இயக்குநர் திரு. சி. கணேசன் அவர்கள் மாணவர்களிடம் கேட்டறிந்து பாராட்டினார்.



04.08.2023 வர்த்தக கண்காட்சியின் முதல் நாள் அன்று கே.எல்.என். பொறியியல் கல்லூரி மற்றும் ஸ்ரீமந் நாயகியார் வித்யா மந்திர் பள்ளியின் மாணவ.மாணவிகள் கலந்து கொண்டு வர்த்தக கண்காட்சியை பார்வையிட்டனர்.







# ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-ன் வீட்டு உபயோக பொருட்களின் வர்த்தக கண்காட்சி மற்றும் விற்பனை



# ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-ன் வீட்டு உபயோக பொருட்களின் வர்த்தக கண்காட்சி மற்றும் விற்பனை





06.08.2023 – நிறைவு விழாவில், மாவட்ட தொழில் மையத்தின்
உதவி இயக்குநர் (தொழில்நுட்பம்) **திரு. என்.எஸ். கிருஷ்ணன்** அவர்கள்
மூன்று நாள் கண்காட்சியில் இடம்பெற்ற ஸ்டால்களுக்கு பங்கேற்புச் சான்றை வழங்கினார்.



மாவட்ட தொழில் மையத்தின்
உதவி இயக்குநர் (தொழில்நுட்பம்)
**திரு. என்.எஸ். கிருஷ்ணன்** அவர்களுக்கு
ஸௌராஷ்ட்ரா சேம்பர் ஆப் காமர்ஸ் சார்பாக
சேம்பர் நிர்வாகிகள் நினைவுப் பரிசை வழங்கியும்
பொன்னாடை அணிவித்தும் கௌரவித்தனர்.
ஸ்டால் ஏற்பாடுகள் அனைத்தும்
சிறப்பாக உள்ளதாகப் பாராட்டினார்.

**ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-ன்**
**வீட்டு உபயோக பொருட்களின்**
**வர்த்தக கண்காட்சி மற்றும்**
**விற்பனை**

**SCC Trade Fair 2023**



குழந்தைகள் கொண்டாட்டத்திற்காக வர்த்தக கண்காட்சியில் இடம் பெற்ற விளையாட்டுகள்



வர்த்தக கண்காட்சியில் இடம்பெற்ற 71 ஸ்டால்களைத் தவிர
டேபிள் ஸ்டால்கள்



மூன்று நாள் வர்த்தக கண்காட்சியில் தினமும் குலுக்கல் முறையில்
பார்வையாளர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.




வர்த்தக கண்காட்சியின் நிறைவு விழா 06.08.2023 அன்று மாலை பங்கேற்ற மதுரை தெற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. மு. பூமிநாதன் அவர்கள், கண்காட்சி அரங்குகளை பார்வையிட்டுப் பாராட்டிப் பேசினார். மேலும், பழம்பெரும் பாடகர் பத்மஸ்ரீ டி.எம். சௌந்தரராஜன் அவர்களுக்கு 16.08.2023 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் **திரு. மு.க. ஸ்டாலின்** அவர்களின் பொற்கரங்களால் திறக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். குழுமியிருந்த மக்கள் அனைவரும் மகிழ்ச்சிப் பெருவெள்ளத்தில் ஆழ்ந்தனர்.

தெற்கு மண்டல தலைவர் திரு. முகேஷ் சர்மா அவர்கள், சிலை திறப்பிற்கான கால தாமதத்தையும், விரைந்து செயல்படுவதற்கு சட்டமன்ற உறுப்பினர் மு. பூமிநாதன் அவர்கள் சிரத்தையுடன் செயல்பட்டதையும் தெரிவித்தார்.

பா.ஜ.க. மதுரை கிழக்கு மாவட்ட பார்வையாளர் திருமதி. ஏ.ஆர். மஹாலட்சுமி அவர்கள், கண்காட்சி ஏற்பாடுகளை பார்த்து பிரமித்து, நம் சமூக தொழில் முனைவோர்களின் வளர்ச்சி, சமூக முன்னோர்களின் அரசியல் செயல்பாடுகள், கொடைகள் போன்ற பல்வேறு தகவல்களை தமது பேச்சாற்றலால் அனைவரையும் கவர்ந்தார்.

## LUCKY DRAW SPONSORS

| | |
|---|---|
| M/s. EAV Rengachary & Sons | - Mens Wear & Ladies Wear |
| M/s. Orient Builders & Decor | - Basmati Rice |
| M/s. Jayalakshmi Tex | - Cotton Sarees |
| M/s. Pandian Surfactants Pvt. Ltd. | - Soap & Floor Oil |
| M/s. Sun Agency | - Pooja Products |
| M/s. New Dasu Metals | - Gift Articles |
| M/s. Tirumalay Packs | - Fancy Bags |
| M/s. Ravi Sarees | - Food Products |
| M/s. Siva Agency | - Solapur Towels |
| M/s. Akshaya Textiles | - Bedspread |

கண்காட்சி நடைபெற்ற மூன்று நாளும் பொதுமக்களுக்கு குலுக்கல் முறையில் பரிசுகளை வழங்க முன் வந்த நிறுவனத்தினருக்கு சௌராஷ்ட்ர சேம்பர் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறது.

## SCC Trade Fair 2023 - TEAM

**K.K. DINESH,** *Chairman,*
**S.G.SRINIVASAN,** *Stall Committee Chariman*

**T.R.MOHANRAM** President
**KUMARAN B JAGHUVA** Imm. Pt. President
**K.K. KUBENDRAN** General Secretary
**A.B. KUMARESH BABU** Treasurer
**V.V. RAMLAKSHMANJI** Jt. Secretary
**T.R. SARAVANAN** Jt. Secretary

*Committee Members :*
**N.N.HARIRAM,**
**M.K.YOGANATHAN,**
**M.G.VIJAYAKUMAR**

**Public Relation :** T.N.SURYA PRAKASH
**Stall Promotion :** S.M.KARTHI KUMARAN
**Event Publicity :** S.S.RAMSUNDAR
**Food :** Dr. A.R.GANESAN


Fine Printers
Graphic | Print | Packaging
NK CTP
PREPRESS SOLUTIONS
WEDDING CARDS | BROUCHER | FLYERS | CALANDERS
PACKAGING BOX | LABELS
66 SERIES
+91 93441 33320 +91 63834 33909
+91 82489 30871
finekumaran5@gmail.com
137/1 South Marret Street, (Manjanakkara St. Junction), Madurai - 625 001.



Sowndarya Traders
Dealers : Recron, Sleepwell, Suham, Glory, Centuary
T.G. Suraj Lal D.T.Tech
Mobile : 98436 - 20908
97869 - 48733
WASHABLE :
★ FANCY CURTAIN CLOTHS ★ BABY - PRODUCTS ★ PILLOWS, BEDS
★ BOLSTERS ★ CUSHIONS ★ QUILTS
57-A, Navabathkana Street, Madurai - 1.
Ph : 0452-4374869, E-mail : surajlal75@gmail.com



**fine** Printers
Graphic | Print | Packaging




NK CTP
PREPRESS SOLUTIONS





WEDDING CARDS | BROUCHER | FLYERS | CALANDERS
PACKAGING BOX | LABELS

+91 93441 33320 +91 63834 33909
+91 82489 30871
finekumaran5@gmail.com
137/1 South Marret Street, (Manjanakkara St. Junction), Madurai - 625 001.





இன்று (23.08.2023 ) சென்னை, கலைவாணர் அரங்கத்தில், வணிகவரித் துறை சார்பாக, மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு பி.மூர்த்தி அவர்கள் தலைமையில் தமிழ்நாடு அனைத்து வணிகர் சங்கப் பிரதிநிதிகளின் கருத்து கேட்பு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், வணிகவரி மற்றும் பதிவுத் துறை அரசு செயலாளர் திருமதி பா. ஜோதி நிர்மலாசாமி, இ.ஆ.ப., வணிகவரி ஆணையர் / முதன்மைச் செயலாளர் திரு. தீரஜ் குமார், இ.ஆ.ப., வணிகவரி கூடுதல் ஆணையர்கள் திரு. அ.பா. தேவேந்திர பூபதி, திரு. மு. பரமேஸ்வரன், திருமதி கு.லதா, திரு. ஜி.முகம்மது நௌபல், இ.வ.ப., திரு.ஆர்.எல். அருண் பிரசாத், இ.வ.ப., வணிகவரித் துறை உயர்அலுவலர்கள், வணிகர் நல வாரிய உறுப்பினர்கள் மற்றும் பல்வேறு வணிகர் சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

23.08.2023 அன்று வணிக நல வாரியம் கூட்டம் சென்னை கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்றது. தமிழ்நாடு முழுவதும் உள்ள பல்வேறு வணிகர்கள் சங்கங்களின் பிரதிநிதிகளுடனான கருத்துக்கேட்பு கூட்டத்திற்கு, நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் அங்கத்தினர்களையும் பங்கேற்க அழைப்பு கடிதம் கிடைத்தது. இந்த கூட்டத்தில், வணிகர்கள் தங்கள் குறைகளை அறிந்து தீர்வு காண்பதற்காக நடைபெற்றது. இதில் மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் திரு. பி. மூர்த்தி அவர்கள் தலைமைத் தாங்கினார்.

இந்த கூட்டத்தின் சில முக்கிய அறிவிப்புகளின் தொகுப்பு:

★ 1. மதிப்புக் கூட்டு வரி நடைமுறை காலத்திற்கான சமாதானத் திட்டம் விரைவில் அறிவிக்கப்படும்.

★ 2. தமிழ்நாட்டிற்குள் மஞ்சள் போக்குவரத்திற்கு மின்வழிச் சீட்டு தேவையில்லை. ஏற்கனவே மின்வழிச் சீட்டு இல்லை என்கிற காரணத்திற்காக, விதிக்கப்பட்ட அபராதத் தொகை திருப்பித் தரப்படும்.

★ 3. பொருள் போக்குவரத்தில் ஆவணங்களில் சிறு சிறு தவறுகள் ஏதேனும் கண்டுபிடிக்கப்பட்டால் ரூ. 500 மட்டுமே அபராதம் விதிக்க வேண்டுமென சுற்றும் குழுவினருக்கு அறிவுரைக்கப்படும்.

★ 4. இணையவழி இரசீதுகளில் ஏற்படும் சிறு சிறு தவறுகளுக்கு அபராதம் விதிக்கபடாது.

★ 5. தொழில் மற்றும் வணிக நிறுவனங்களில் சி.ஜி.எஸ்.டி. துறையினர் ஆய்வு மேற்கொண்டிருந்தால், அவ்விடங்களில் மாநில வரித்துறையினர் ஆய்வு மேற்கொள்ளப்பட மாட்டாது. மேற்குறிப்பிட்டுள்ள தீர்மானங்கள் தெரியப்படுத்தப்படுகின்றன. விரைவில் இன்னும் சில அறிவிப்புகள் வெளிவரும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

*தகவல் உதவி : தமிழ்நாடு சேம்பர் ஆப் காமர்ஸ்*


APPOLO SALES & SERVICE
# அப்போலோ மோட்டார் & பம்ப்ஸ்

Mfrs : SRI KARTHICK PUMPS, MADURAI - 625 009. GSTIN : 33CALPK9113M1ZE
YOUR TRUSTED BRAND IN JET PUMPS SOURASHTRIAN PRODUCT
32B, குருவிக்காரன் சாலை,
கணேஷ் தியேட்டர் பாலம் அருகில், மதுரை - 625 009.
98428 14725

பழைய மோட்டார் EXCHANGE செய்யப்படும்



கம்பரசர் மோட்டார் ரூ12,500 முதல்
மோனோபிளாக் மோட்டார் ரூ 6500 முதல்
ஓபன்வெல் மோட்டார் ரூ 5500 முதல்
சப்மெர்சிபள் பம்ப் (காப்பர் ரோட்டர்) ரூ 7500 முதல்

லாப் ஸமாச்சாரில் விளம்பரம் செய்ய
93441 97952



நூறாண்டு கால பட்டு பாரம்பரியம்
SRB SILKS HOUSE
145,East Veli Street, Thavitusanthai, Madurai-1.
Cell : 92445 00633

SRB 100 YEARS

SRB FINSERVE PVT.LTD.
B1, Sivagangai Road, Managiri, K.K.Nagar, Madurai.
(Opp: Aavin High Tech Parlour)
Cell : 90922 97702

SRB RETAIL LLC.
503, Gracelyn Way Lewis Center,
COLUMBUS, OHIO,43035.
Ph : +1 952 290 6405

SRB MULTI PURPOSE HALL
B1, Sivagangai Road, Managiri, K.K.Nagar, Madurai.
Cell : 89039 29247

EXPRESS BRIYANI
Anna Nagar, South Marret St., Kalavasal.
Cell : 97901 59015, 72007 26300

KEESHTU BOLI & SNACKS
East Gate - Kalavasal - Navabathkana Street, Madurai.
Cell : 81243 45000

SRB CATERING
135, 2nd East Main Road, Anna Nagar, Madurai.
Cell : 89398 97500

SWASI NATURO CURE HOSPITAL
ஆயுர்வேதம் – பஞ்சகர்மா – பாதகூஸா, வர்மா மருத்துவம்
S.R.B.Complex, 392, Anna Nagar, Madurai.
Cell : 95977 48952

S.R.B.KISHORILAL ★ S.R.B.MADANLAL
S.R.B.ARUNLAL

VH VEDHAVALLI HOLIDAYS

# OUR SERVICES



## Flight Ticket
Domestic and International



## Tour Package
Domestic and International



## MICE
Meeting | Incentive | Conference | Events



## Family Tour Package



## Corporate Tour Package



## Car Rental

www.vedhavalliholidays.com

**BOOK NOW** 97870 66066

VH VEDHAVALLI HOLIDAYS

Domestic & International Tour Planners | Car Rental | Flight Booking

# வேதவல்லி ஹாலிடேஸ்

காமராஜர் சாலை, மதுரை ● வண்ணாரப்பேட்டை, திருநெல்வேலி



# சிறப்பு சந்திப்புகள்



மதுரை மாவட்ட ஆணையாளர் திரு. கே.ஜே. பிரவின் குமார் அவர்களை நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் நிர்வாகிகள் மரியாதை நிமித்தமாக நேரில் சந்தித்து, வர்த்தக கண்காட்சிக்கு அழைப்பு விடுத்தனர்.



மதுரை மாவட்ட காவல் ஆணையாளர் திரு. நரேந்திரன் நாயர் அவர்களை நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் நிர்வாகிகள் மரியாதை நிமித்தமாக நேரில் சந்தித்து, வர்த்தக கண்காட்சிக்கு அழைப்பு விடுத்தனர்.



நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் – தொழில் வர்த்தக மலரான லாப் ஸமாச்சார் இதழில் தொடர்ந்து விளம்பரம் தந்து ஆதரவளித்து வரும் **ஸ்ரீ சிவபாலாஜி ஸ்டீல்ஸ் பி. லிட்.,** நிறுவனத்தார் **திரு. டி.கே. சுப்பிரமணியன்** அவர்களை லாப் ஸமாச்சார் இதழ் குழுவினர் நேரில் சந்தித்து சென்ற மாத இதழை வெளியீடு செய்தனர்.

புகைப்படத்தில், (இடமிருந்து வலம்): இதழ் சேர்மன் திரு. எஸ்.எம். கார்த்தி குமரன், இணைச் செயலாளர் திரு. வி.வி. ராம்லக்ஷ்மண்ஜீ, நிறுவன இயக்குனர் திரு. டி.எஸ். சிவப்பிரகாஷ், திருமதி. டி.கே. சுப்பிரமணியன், திரு. டி.கே. சுப்பிரணியன், செயற்குழு உறுப்பினர்கள் திரு. டி.என்.சூரியப்பிரகாஷ் மற்றும் திரு. எஸ்.ஜி. ஸ்ரீநிவாசன்.

## இரங்கல்



நமது சேம்பர்-ன் ஆயுட்கால உறுப்பினர் டி.எஸ். மாதவன் & சன்ஸ் உரிமையாளர் திரு. **டி.எஸ்.எம். சந்திரசேகர்** அவர்கள் கடந்த 15.07.2023 அன்று காலமானார். அவரை இழந்து வாடும் அவர்தம் குடும்ப உறுப்பினர்களுக்கு நமது சேம்பர் ஆழ்ந்த வருத்தத்தையும், அன்னாரது ஆன்மா சாந்தி அடைய இறைவனையும் வேண்டுகிறது.

## இரங்கல்



நமது ஸௌராஷ்ட்ர சேம்பர்-ன் ஆயுட்கால உறுப்பினர் **திரு. டி.பி. கிரிதரன்** அவர்கள் கடந்த 25.07.2023 அன்று காலமானார். அவரை இழந்து வாடும் அவர்தம் குடும்ப உறுப்பினர்களுக்கு நமது சேம்பர் ஆழ்ந்த வருத்தத்தையும், அன்னாரது ஆன்மா சாந்தி அடைய இறைவனையும் வேண்டுகிறது.

## சென்ற ஜுலை மாத ஸௌராஷ்ட்ர சேம்பர்-ன் அலுவலக நிர்வாக செயல்பாடுகள்

– ஜே.எஸ். சாயிஜீவன், சேர்மன், அலுவலக நிர்வாகக் குழு

| | | |
|---|---|---|
| நிர்வாக / செயற்குழு கூட்டங்கள் | | 01 |
| தொழில் கூட்டங்கள் | | 01 |
| சிறப்பு நிகழ்ச்சிகள் / கூட்டங்கள் & சந்திப்புகள் | | 08 |
| புதிய உறுப்பினர்கள் சேர்க்கை | ஆயுட்கால | 02 |
| | சந்தா | 02 |
| நூலக பயன்பாடு | | 0 |
| தொழில் ஆலோசனை / சேவை | | 02 |
| உத்யம் பதிவு / திருத்தம் செய்தவர்கள் | | 01 |
| முக்கிய கடிதப் போக்குவரத்து | | 03 |
| அரசு கோரிக்கை | | 0 |
| பொது நிகழ்ச்சிகள் / விழாக்களில் சேம்பர் பங்களிப்பு | | 04 |
| வேலை வாய்ப்புகள் சேவைகள் | | 02 |
| சமூக சேவைகள் | | 0 |

## ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-ன் 10[வது] செயற்குழு கூட்டம்





வர்த்தக கண்காட்சி சிறப்பாக நடைபெற்றதற்கு ஸ்டால் சேர்மன் **திரு. எஸ்.ஜி. ஸ்ரீநிவாசன்** அவர்களை செயற்குழு பாராட்டியது.

வர்த்தக கண்காட்சி சிறப்பாக நடைபெற்றதற்கு கண்காட்சி சேர்மன் **திரு. கே.கே. தினேஷ்** அவர்களை செயற்குழு கௌரவித்தது.

PANDIAN
PERFORMANCE CHEMICALS

# PANDIAN SURFACTANTS PRIVATE LIMITED

57\62,(N.P) 3rd Street, SIDCO Industrial Estate, Ambattur Industrial Estate, Pattravakkam, Chennai-600 098

Home Care ▸ Fabric Care ▸ Personal Care ▸ Skin Care



## PANDIAN SURFACTANTS PRIVATE LIMITED

- ALPHA OLEPHIN SULPHONATES
- SODIUM LAURYL ETHER SULPHATES
- SODIUM LAURYL SULPHATES
- CETOSTEARYL ALCOHOLS
- FATTY ALCOHOLS
- OLEO CHEMICALS
- POLYMERS
- PERFORMANCE CHEMICALS &
- FRAGRANCES

Dealers in

Godrej
Godrej Industries Limited

IFF
International Flavours & Fragnace Pvt. Ltd.



K K Dinakaran

www.pandiansurfactants.com /
www.pandianfragrances.com

Ph : + 91 44 2642 6202 / 2661 4405 | Cell : 9940960833, 9840960831

Scanned with CamScanner

# ஜி.எஸ்.டி., கவனத்தில் கொள்ளுங்கள்

* IRN, QR CODE, ACK NO. இல்லாமல் அனுப்பும் Invoice Invalid. Just a Paper ஆக கருதப்படும். Check ஆகாமல் சரக்கு போய் சேர்ந்தால் டீலர் Luck. இல்லையெனில் சிக்கல் தான். 100 கோடிக்கு மேல் Turnover உள்ளவர் 7 நாட்களுக்குள் Generate செய்துவிட வேண்டும் என்று கூறிவிட்டார்கள். Return File செய்யாத நிலையில் ஏப்ரல் இன்வாய்ஸ் இன்று கூட IRN Generate ஆகலாம். IRN Date இன்றைய தேதியாகவே இருக்கும். எடுத்தவருக்கு சிக்கல் தான். E-Invoice eligible உள்ளவர்கள் Invoice பொருள் நிறுவனத்தில் இருந்து வெளியே போகும் போது IRN, QR Code, ACK No. உடன் போவது தான் பாதுகாப்பு.

* Tally-ல் E-Invoice & E-Way Bill ஒரே நேரத்தில் Generate செய்ய முடியும். ஆனால் E-Way Bill தனியாக Generate செய்வதே நல்லது. ஏனென்னறால், உ–ம். Invoice போடுங்கள் என்று வண்டி எண்ணையும் சொல்லி, வண்டி அனுப்புகிறேன் என்றும் கூறிவிடுவார்கள். இரண்டு மூன்று மணி நேரம் கழித்து அந்த வண்டி ரிப்பேர், வண்டி வரவில்லை என்று காரணங்கள் கூறி வேறு வண்டி வருகிறது என்று சொல்லுவார்கள். CE-Way Generate ஆன உடனேயே Goods of Movement Time Start ஆகிவிடும். எனவே, வண்டி வந்து சரக்கு ஏற்றி போகும் போது Date Validate முடிவதற்கும் காரணமாகலாம்.

# FSSAI உரிமம் பெற்றவர்கள் கவனத்திற்கு

உணவு வணிக நிறுவனங்கள், உரிமத்தை ஆண்டுக்கு ஒருமுறை புதுப்பிப்பதற்கு பதிலாக, ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை புதுப்பிக்க, இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையம் பரிந்துரைத்துள்ளது.

FSSAI எனப்படும், இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையம் வெளியிட்ட அறிக்கையில் கூறிதாவது, உணவு வணிகத் துறையினர், இனி ஆண்டுதோறும் தங்களுடைய உரிமத்தை பதுப்பிக்க வேண்டிய தேவை இருக்காது. வணிகர்களின் விருப்பத்தின்படி, இனி ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை உரிமத்தை புதுப்பிக்க மத்திய ஆலோசனைக் குழு பரிந்துரைத்துள்ளது.

தொழிலை எளிதாக்கும் வகையில், உணவுத்துறை விடுத்த கோரிக்கையில் இதுவும் ஒன்றாகும். இத்துறையினர் ஆய்வு கூடங்களை நிறுவவதன் வாயிலாக, உணவு தயாரிப்பில் பயன்படுத்தப்படும் நெய், பால், மசாலா பொருட்கள் போன்ற முக்கிய மூலப் பொருட்களை அவர்களே சோதனை செய்துகொள்ள முடியும். மேலும் உணவு பொருட்களை கையாளுபவர்களுக்கு, தேவையான பயிற்சிகளையும் வழங்க வேண்டும். அடுத்த 3 ஆண்டுகளில், 25 லட்சம் உணவு வணிகத் துறையினருக்கு பயிற்சி அளிக்கப்பட வேண்டும் என்ற இலக்கை எட்ட தேவையான முயற்சிகளை மாநிலங்கள் எடுக்க வேண்டும். இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மூன்று எக்ஸ்பிரஸ் ரயில்கள் ஒற்றை ரயிலாக மாற்றம்

தற்போது தினசரி இயக்கப்பட்டு வரும் குருவாயூர் – புனலூர் குருவாயூர் எக்ஸ்பிரஸ், மதுரை – செங்கோட்டை மதுரை எக்ஸ்பிரஸ், செங்கோட்டை – கொல்லம் செங்கோட்டை எக்ஸ்பிரஸ் ரயில்கள் ஒன்றாக இணைக்கப்பட்டு, மதுரை – குருவாயூர் மதுரை எக்ஸ்பிரஸ் என்ற பெயரில் ஒரே ரயிலாக, மதுரைக்கும், குருவாயூருக்கும் இடையே இயக்கப்பவுள்ளதாக தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது. ரயில் எண் 16327 மதுரை – குருவாயூர் எக்ஸ்பிரஸ், மதுரையில் இருந்து பகல்11.20 மணிக்கு புறப்பட்டு, அடுத்த நாள் அதிகாலை 2.10 மணிக்கு குருவாயூரை அடையும். மறுமார்க்கத்தில், ரயில் எண் 16328 குருவாயூர் – மதுரை எக்ஸ்பிரஸ், குருவாயூரிலிருந்து காலை 5.50க்கு புறப்பட்டு, அன்று இரவு 7.50க்கு மதுரை சென்றடையும். இந்த ரயில், மதுரை, விருதுநகர், சிவகாசி, ராஜபாளையம், தென்காசி, செங்கோட்டை, புனலூர், கொல்லாம், கோட்டயம், திருச்சூர் உள்ளிட்ட ரயில் நிலையங்களில் நின்று செல்லும்.

Kindly Save our **Whatsapp No:**
To get our Correspondence, Business News / Information, Govt. Notifictions, Amendments, New Technology etc.,
**93441 97952**

Kindly send your Feedbacks of our **laabh Samachar & SCC Activities** To
**93441 97952**

## கடன் பெறுவதற்கு பொதுத்தளம் – ரிசர்வ் வங்கி அறிமுகம்

சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கான பிணையம் இல்லைாத கடன்கள், கிசான் கிரெடிட் கார்டு வாயிலாக, ரூ. 1.6 லட்சம் வரையிலான கடன்கள் மற்றும் சம்பந்தப்பட்ட வங்கிகள் வாயிலாக பெறும் தனிநபர், வீட்டுக்கடன் போன்றவற்றை எளிதாக பெறும் வகையில் கடன் வழங்குவோரையும், வாங்குவோரையும் இணைக்கும் வகையிலான பொது தொழில்நுட்ப தளத்தை ரிசர்வ் வங்கி அறிமுகப்படுத்தி உள்ளது.




**VIJAYASHANKAR SCREEN SUPPLIERS**

**Non Woven Fabrics & Bags**

Surgical Spunbond & Lace
SMMS
100% Viscos
Hydrophilic
JUTE FABRICS & BAGS
COTTON FABRICS & BAGS
Sanitary Napkin Raw Materials
Screen Printing Materials /
Plastisol Ink (Sports Printing) Water Base Ink, Sublimation Ink & Paper

**Surgical Gown, Mask & More**

N95 Masks
PPE Kit Surgical

J.A. SANKAR
94431 34465
For Order & Info
93441 04451, 91500 32885 / 86

H.O.: 44/1, New No.105, South Masi Street, Madurai - 1. Email: vijayasankar@gmail.com
B.O.: 94, 102 & 103A, South Marret Street, Madurai - 625001


# சமூக செய்திகள்

## வளர்ச்சிப் பாதையில் N.K. குப்பய்யன் ரத்னாமணி பள்ளி



நிலையூர் கைத்தறி நகர் N.K. குப்பய்யன் ரத்னாமணி பள்ளியில், 01.08.2023 முதல் **Daily Dairy** என்கிற புதிய திட்டம் துவங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி முதலில் எல்.கே.ஜி & யூ.கே.ஜி. வகுப்புகளில் பயிலும் 155 மாணவ, மாணவியர்களுக்கு தினசரி காலை 11.00 மணிக்கு நன்றாக காய்ச்சிய பால் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த திட்டம், குவாலிட்டி நிட் வியர்ஸ் பி.லிட்., நிறுவனம் ஏற்று நடத்துகிறது. மேலும், ரோட்டரி கிளப் ஆப் மதுரை நெக்ஸ்ட்ஜென் சார்பில், பள்ளியில் 640 சதுர அடி பரப்பளவில் அதிநவீன **Study Centre**-ஐ ஆரம்பித்து உள்ளது. இந்த Study Centre-ன் முக்கிய நோக்கம் மாணவர்களின் வாசிப்புப் பழக்கத்தை மேம்படுத்துவதும், போட்டித் தேர்வுகளுக்கு மாணவர்கள் தங்களை தயார்படுத்திக்கொள்ள உதவுவதும் ஆகும். மேலும், Digital Study Centre-ல் வீடியோ விரிவுரைகளுக்கான ஆண்ட்ராய்டு டிவி, இ-புத்தகங்களை பெறுவதற்கான டெஸ்க்டாப், போட்காஸ்ட், யூ-டியூப் ஸ்ட்ரீமிங் போன்றவற்றுடன் இந்த டிஜிட்டல் மையத்தை மேம்படுத்தியுள்ளது.

## வீரவநல்லூர் செடி புட்டா சேலைக்கு புவிசார் குறியீடு - நம் சமூக மக்கள் மகிழ்ச்சி



நெல்லை மாவட்டம் சேரன்மகாதேவி தாலுகாவிற்குட்பட்ட வீரவநல்லூர், வெள்ளாங்குழி, புதுக்குடி ஆகிய பகுதிகளில் 1500க்கும் மேற்பட்ட நம் சௌராஷ்ட்ர சமூகத்தை சேர்ந்த குடும்பத்தினர் வசித்து வருகின்றனர். இப்பகுதி மக்களின் குடும்பத் தொழிலாக கைத்தறி மற்றும் சமையல் தொழில் உள்ளது. செடிபுட்டா சேலை வகைகள் மற்றும் பட்டு சேவைலகளை இயந்திரம் இன்றி கைத்தறி நெசவுகளைக் கொண்டு கூட்டுறவு சங்கங்களால் வழங்கப்படும் நூல்களை பெற்று நெய்து வருகின்றனர். இப்பகுதியில் நெய்யப்படும் செடிபுட்டா சேவைலக்கு உலகம் முழுவதும் வரவேற்பு உள்ளது. சுத்தமான பருத்தி நூல்களாலும், எந்த ஒரு கெமிக்கல் இன்றியும் மூலிகை செடிகள் மூலம் கிடைக்கும் கலர்களைக் கொண்டு நெய்யப்படுகிறது. இந்த வகை சேலை, இந்தப்பகுதியைத் தவிர உலகில் வேறு எங்கும் தயாரிக்கப்படுவதில்லை. தற்போது இதற்கு புவிசார் குறியீடு கிடைத்துள்ளது.


**JC கணேசன் மருத்துவமனை**
NABH Accredited
அழகர்கோயில் ரோடு, சர்வேயர் காலனி, மதுரை - 7
98421 03579, 98427 03579, 97886 03579
jcganesan@gmail.com , Facebook.com/jcortho

**Dr. J.C. GANESAN**
MBBS., D.Ortho., DNB Ortho, MNAMS, Mch ortho(UK)

**Dr. MALARKODI GANESAN**
MBBS., DGO, DNB(org)

**சிறப்பு சிகிச்சை முறைகள்**

- மூட்டு மாற்று அறுவை சிகிச்சை
- ஆர்த்திராஸ்கோப்பி சிகிச்சை
- சேராத எலும்பை சேர்க்கும் / வளர்க்கும் வளையமுறை இல்லிசாரோவ் சிகிச்சை
- முதுகு, மூட்டு, தோள்பட்டை வலி சிகிச்சை
- குழந்தையின்மை சிகிச்சை
- வலியில்லாப் பிரசவம்
- கர்ப்பப்பை கோளாறுகள்
- லேப்ராஸ்கோப்பி சிகிச்சை

**இன்சூரன்ஸ் வசதி** மெடி அசிஸ்ட், ஸ்டார் ஹெல்த், பென்சனர் கவர்ன்மெண்ட் எம்பிளாயிஸ், குட் ஹெல்த் வசதிகள்

# கேள்வி - பதில் போட்டி

இந்த கேள்வி பதில் போட்டியில், சரியான விடையளிப்பவர்களுக்கு குலுக்கல் முறையில் பரிசளிக்கப்படும். கீழ்காணும் கேள்விகளுக்கான தங்களின் பதிலை எழுதி புகைப்படம் எடுத்து, **93441 97952** என்ற எண்ணிற்கு வாட்ஸ்ஆப் செய்யவும். பிரதி மாதம் செவ்வாய்க்கிழமை அன்று நடைபெறும் சேம்பர் வர்த்தக கூட்டத்தில் அங்கத்தினர்கள் முன் அதிர்ஷ்டசாலிகள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

1. உன்னை வெல் நிகழ்ச்சி யாருக்காக நடத்தப்பட்டது?

.......................................................................................................

2. 77வது சுதந்திர தின விழாவில் சிறப்பு விருந்தினர் யாரைப்பற்றிப் பேசினார்?

.......................................................................................................

3. சந்திரயான் விண்கலத்தில் உள்ள லேண்டர் மற்றும் ரோவர் பெயர்?

.......................................................................................................

4. பத்மஸ்ரீ டி.எம். சௌந்தரராஜன் அவர்களுக்கு எந்த நாளில் சிலை திறக்கப்பட்டது?

.......................................................................................................

5. கண்காட்சியில், எந்தக் கல்லூரி மாணவர்களின் திறன் படைப்பு இடம்பெற்றது.

.......................................................................................................

| | |
|---|---|
| முதல் பரிசு ரூ. 500/- | பெயர் :.................................................. |
| | தொழில்:.................................................. |
| இரண்டாம் பரிசு ரூ. 300/- | தொலைபேசி எண்:.................................................. |
| | சேம்பர் உறுப்பினரா?: ஆம் / இல்லை .................................................. |
| மூன்றாம் பரிசு ரூ. 200/- | இருப்பிடம்:.................................................. |

## CONGRATULATIONS!!!...

| | | |
|---|---|---|
| சென்ற மாத கேள்விக்கு சரியான விடை அளித்து குலுக்கல் முறையில் வெற்றி பெற்றவர்களுக்கு கிடைக்கும் பரிசுகள் | முதல் பரிசு ரூ. 500/- | திரு. வி.எஸ். ராஜா<br>கைத்தறி நெசவு<br>திருநகர் / 92456 01835 |
| | இரண்டாம் பரிசு ரூ. 300/- | திரு. எல்.என்.டி. அஞ்சனா<br>மனித வள மேம்பாட்டுத் துறை<br>மஞ்சனக்கார தெரு / 74187 88177 |
| | மூன்றாம் பரிசு ரூ. 200/- | திரு. டி.டி. விவேகானந்தன்<br>ஜவுளி ஏஜென்ட்<br>இந்தியா புல்ஸ் / 94433 34981 |

அதிர்ஷ்டசாலிகள் நேரில் வந்து பரிசை பெற்றக்கொள்ளவும்

## செப்டம்பர் மாத தொழில் வர்த்தக கூட்ட அறிவிப்பு

Topic : **TECHNOLOGIES IN POWER SECTOR**

Guest : **Dr. S. PARTHASARATHY,** M.E., Ph.D.,
Professor / EEE
Director / K.L.N. Innovation Research Park(KLN-IRP)
K.L.N. College of Engineering, Pottapalayam.



Date : **05.09.2023 (Tuesday)**
Time : **06.00 PM**
Venue : **SCC Hall A/C**

*Welcome*




Prop.: B.S. Rajan

• CCTV Camera • Long Distance Monitor • Security Alarm • Digital Video Recorder
• Voice Records • Access Control System • Firm Alarm • Audio & Video Door Phones

*Safety! Security!! Surveillance!!!*

**A TO Z CCTV SYSTEMS**
CCTV Camera Exclusive Showroom

*Head Office :*
No. 45, Kakkathoppu Street,
Town Hall Road, Madurai - 1.
Ph : 0452 - 4377609, 4522633 Cell : 98421 82633

*Branch Office :*
66, Kamarajar Street,
Opp. Keelavasal Bus Stop, Madurai - 9.
Cell : 73737 82633

Raj Tv / Vijay Tv / Vijay Super / Star Vijay / Vasanth Tv / Tms Award

www.bestnumerologist.com
sharvaraksanmrs@yahoo.co.in

தென் தமிழகத்தின் சிறந்த எண் கணித வித்தகர் / ஏகலை எண்கணிதன்
உலக அளவில் சௌராஷ்ட்ரா சமூகத்தில் முதல் எண் கணித ஜோதிடர்

**'ஷர்வ ரக்சன்' MRS**
Best Numerologist

Your Name is Your Life

பிறந்த குழந்தைகளுக்கு, உங்களுக்கு, உங்கள் வியாபார நிறுவனங்களுக்கு
அழகான, அதிர்ஷ்டகரமான மற்றும் வஷியம் மிகுந்த பெயர் `எண் கணித ஜோதிட'
முறைப்படி கணித்துக் கொடுக்கப்படும். திருமண பெயர் பொருத்தம் பார்த்துக் கொடுக்கப்படும்



**MANTHRALAYAM** 26, Packiyam Street, Anupanadi Theppakulam Main Road
Opp to Sourashtra Girls Higher Sec School, Madurai

For Appointment
**98421 11411**



Published by : **K.K. Gnana Prabhakaran** on behalf of Sourashtra Chamber of Commerce, 5A, Pankajam Colony 3rd Cross Street, Teppakulam, Madurai - 625009
Printing by : **K.R. Ramalingam** @ Viswajith Printers, No. 1, Varpukannara Lane, Chinnakadai Street, Madurai - 625 001.
Editor : **K.K. Gnana Prabhakaran**

நம்பிக்கைக்கும், வலிமைக்கும்

**JSW COLOURON+ கூரைகள்**

**JSW Steel**

JSW கலர் ஆன் இந்தியாவின் முதன் முதலாக

தரசான்று பெற்ற வண்ணம் பூசிய கூரைகள்





## ஸ்ரீ சிவபாலாஜி ஸ்டீல்ஸ் பி. லிட்.

18B, நத்தம் ரோடு, திண்டுக்கல் - 624 003.

போன் : 0451 - 2470573, செல் : 84899 23302, 91, 92, 93, 63

கிளை : 1/37, அப்பலோ மருத்துவமனை கார் பார்க்கிங் அருகில், மேலமடை, மதுரை - 625 020.

**Email : sivabalajisteel@gmail.com, Web : www.s4ss.in**

நீடித்த உழைப்பால் மக்கள் மனதில் நிலைத்து நிற்கும் மீரா குஞ்ச் தயாரிப்புகள்


**Meerakunj**

RIGID PVC PIPES, FITTINGS & TANKS

AN ISO 9001 : 2008 COMPANY

*Trust us with all your Electrical Plumbing and Agri needs...*





## மீரா குஞ்ச் பாலிடிரேடர்

17-18, காக்கா தோப்புத் தெரு, மேல மாசி வீதி, மதுரை - 625 001.

போன் : 0452-2343372, 4381372, 4373372, செல் : 98421-43372

E-mail : meerakunjpipes@yahoo.in www.meerakunj.com



# உமா நகர்

அரசு அனுமதி பெற்ற வீட்டு மனைகள் விற்பனைக்கு

DTCP APPROVED

தொடர்புக்கு: திரு. S.A. உதயகுமார் நிறுவனர்

**U K ஹோம்ஸ் & பிளாட்ஸ், மதுரை – 625012 +91 99659 81810**

**வளர்ச்சி பெறும் திருமங்கலம்**

- மெட்ரோ ரயில் முதல்கட்ட பணிகள்ஆரம்பம்
- ரயில்வே மேம்பாலம் முதல்கட்ட பணிகள் ஆரம்பம்
- அமையவிருக்கும் எய்ம்ஸ் அருகிலுள்ள டவுன்ஷிப் திருமங்கலம்
- எங்கள் மனைப்பிரிவில் இருந்து 6கி.மீ., தொலைவில் கப்பலூர் ZOHO IT கம்பெனி அமைகிறது.
- மனைபிரிவிலிருந்து சிறிது தொலைவில் மெட்ரோ ரயில் ஸ்டேஷன் அமையும் வாய்ப்பு.

*நாளிதழ்களில் வரும் தகவல்கள் படி.

TNRERA

முகவரி: P.K.N. வித்யாலயா பள்ளி(CBSE) எதிர்புறம், வடகரை, திருமங்கலம் – 625 706. பஸ் ரூட்: 37B / பஸ் ஸ்டாப்: PKN கல்லூரி

எங்கள் லே-அவுட், திருமங்கலம் நகர் பகுதியில் இருந்து 3 கி.மீ., தொலைவில் அமைந்துள்ளது.

info@onvgprint.com

+91 95 97 775 775

FOLLOW US ON

எல்லா விதமான பிரிண்டிங் தேவைக்கு....

visit : www.onvgprint.com

# onVGPrint.com

— A unit of VIGNESH GRAPHICS —

79-A, South Marret Street, Madurai - 625 001. | 33, Manjanakara Street, Madurai - 625 001. | 48/5, TNHB Colony, Mela Anuppanadi, Madurai - 625 001.

Mobile : 93441 01432, 98434 14310 Email : vgmadurai1@gmail.com

RNI No. TNBIL / 2012 / 46449
Postal Regn. No. : TN / MA / 145 / 2022-2024
Printed Matter

Date of Posting : 30.08.2023 / BPC MDU
WPP No. TN / WPP -165 /SR / 2022 - 2024
Date of Publication 20th of Every Month

0452 231 2293 98409 60846 / 90479 50885

**UG CHEMI JAGSAN**

**U G கெமி ஜாக்சன்**



(Innovators in Construction Admixtures &
Promoters of Geo Polymer Concrete - Concrete without Cement)

5A, New No : 17, Room No : 3, Pankajam Colony 4th Cross Street Madurai:625 009

E mail : info@ugchemijagsan.com / Web : www.ugchemijagsan.com



**வேல் மருத்துவமனை**

**வேல் சிறப்பு எலும்பியல் மையம்**

Institute for Trauma, Shoulder & Knee, Sports Injury, Arthroscopy & Joint Replacement

VALE HOSPITAL

45, குருவிக்காரன் சாலை, அண்ணா பஸ் ஸ்டாண்டு, மதுரை- 625 020. Ph: 0452-4367597

Contact : 97871 91156, 95003 16661, 93442 46436 | vsoc.drkns@gmail.com | www.valeortho.com

Dr. K.N. சுப்ரமணியன் MBBS, MS, MRCS Ed, M.Ch. Orth, FRCS (Tr & Orth), CCT Orth (GMC-UK)

Chief - Otho Unit 3 / Senior Consultant, Velammal Medical College & Speciality Hospital, Madurai.



24hrs Service



**சிறப்பம்சங்கள்**

- நவீன கருவிகள் பொருத்தப்பட்ட அறுவை சிகிச்சை அரங்கம்
- முழுவதும் குளிரூட்டப்பட்ட மருத்துவமனை
- நவீன நுண்துளை சிகிச்சை கருவிகள்
- மூட்டு மாற்று சிகிச்சைக்கான சிறந்த உள்கட்டமைப்பு
- எலும்புகளுக்கு உண்டான ஸ்டெம் செல் சிகிச்சை
- விளையாட்டு மறுப்பயிற்சி
- மருந்தகம்
- டிஜிட்டல் எக்ஸ்ரே
- இரத்தப் பரிசோதனை
- நவீன பிஸியோ

*Experience the Expertise Advice*

**உங்கள் எலும்பு மற்றும் மூட்டு பிரச்சனைக்கு எளிய தீர்வு மையம்**

- முழங்கால் ஜவ்வு பழுதடைதல்
- தீராத தோள் மூட்டு வலி
- தோள் மூட்டு விலகுதல்
- விளையாட்டு காயங்கள்
- மூட்டு தேய்மானம்
- விபத்தினால் உண்டான சிக்கலான மூட்டு பிரச்சனைகள் & இதர எலும்பு & மூட்டு நோய்கள்

- மூட்டு நுண்துளை சிகிச்சை
- விபத்து அறுவை சிகிச்சை
- முழங்கால் & தோள் மூட்டு மாற்று சிகிச்சை
- விளையாட்டு இயல்முறை பயிற்சி

*Right Treatment is Everyone's Right*

**கைத்தறியில் ஓர் புதுமை**

**Electronic Jacquard**



**Technical Details :**

- Product from India' most Trusted name in Looms and Jacquard Machines.
- No of Hooks : 480, 680, 960, 1280 Hooks
- Max Speed : 200 to 550 RPM
- Max Shedding : 75 to 110 mm



**Applications :**
Sarees • Bed Sheets • Furnishing • Dress Material • Blankets • Made Ups • Shirting



N.S. Rajan

**SRE CORPORATION**

359, Balaji Nagar, Tank Road, Opp. Ulavar Santhi,
Singanallur, Coimbatore - 641 005.
Mobile : 98432 60553, 98422 33645, 98430 460 64, 97876 76494
Email : sre_tex@yahoo.com, sretex@gmail.com

T.S. Saravanan

*Official Publication:*
**SOURASHTRA CHAMBER OF COMMERCE**
136, II Floor, East Veli Street, Madurai - 625001.
Ph: 0452 2629955, Cell: 9344197952
Email: sourashtra.chamber@gmail.com
Web: www.sourashtrachamber.org